**TNEB**

**எம்ப்ளாயீஸ்**

**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 5 ✧ இதழ்-1 ✧ நவம்பர் 2022

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**

**J.L. பாஸ்டின் ராஜ்**

**S. இராமநாதன்**

**K. செல்வராஜு**

**R. ஜெயராமன்**

**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



39/101, சிங்கண்ணா தெரு,

சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை - 600 002.

✆ : 9841446621

tnebemployeesfederation3600@gmail.com


# 63 ஆண்டுகால பாரம்பரியத்தைக் காப்போம்!!!

மழைக்காலம் தொடங்கியுள்ள நேரம். ஆட்கள் பற்றாக்குறையால் அன்றாடப் பணிகளை மேற்கொள்ளும் குறைந்தபட்ச தொழிலாளர்களும் உயிரைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.

11.11.2022ல் திருப்பத்தூர் மின்வட்டத்தில் விபத்தில் இறந்துள்ள கேங்மேன் தோழர் ஆர். முருகன் (எ) முருகேசன் உட்பட இதுவரை சுமார் 40 இளைஞருக்கு மேல் பலி கொடுத்துள்ளோம். செய் அல்லது செத்துமடி என்ற எதேச்சதிகாரம் கோலோச்சும் செயலை நீண்டகாலம் பொறுத்துக் கொள்ள முடியாது, பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது.

50,000க்கு மேற்பட்ட காலியிடங்கள் நிரப்பாமல் அலட்சியப்படுத்துதல் மேலும் நமக்கு ஆபத்தை விளைவித்துக் கொண்டே இருக்கும், 5000 கேங்மேன் நியமனம், கேங்மேன்களுக்கான விடுப்பு இதர சலுகைக்கான உத்தரவு, 1000க்கு மேற்பட்ட பகுதி நேரப் பணியாளர் (சுகாதாரப் பணிக்கு) பிரிவு அலுவலகங்களில் நியமனம், ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம், BP2 ரத்து செய்தல், ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை எல்லாமே கிடப்பில் உள்ளது.

அவுட்சோர்சிங் செய்ய ஆர்வம் காட்டுபவர்களுக்கு ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய விருப்பமில்லை. 2022ம் ஆண்டுக்கான போனஸ் பேச்சுவார்த்தை நடத்தி தரவேண்டும் என்ற வேண்டுகோள் மற்றும் போனஸ் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் இனி வரும் காலங்களில் கடைசி வரை கடைபிடிக்கப்படுமா என்ற கேள்வி எழுகிறது. (SLS அனுமதிக்காதது உட்பட) தலைமைச் செயலகத்தில் அவுட்சோர்சிங் செய்ய முற்பட்டது எதிர்வினையால் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் மின்வாரிய நிர்வாகமும் அரசும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

அகவிலைப்படித் தருவதற்கு வாரியம் அரசாங்கத்தின் கையை எதிர்நோக்கி நிற்கிறது. ஓய்வு பெற்றவர்களில் அகவிலைப்படி அளிக்க எத்தனை அலைக்கழிப்புகள் அரங்கேறியிருக்கின்றன.

TANGEDCO, TANTRANSCO ஒரே நேரத்தில் ஊதிய பட்டுவாடா அளிக்கவில்லை. இரண்டு கழகங்களுக்கும் (TANGEDCO, TANTRANSCO) பொது வைப்பு நிதி கடன் இதர வகைகளுக்கு பணப்பட்டுவாடா 6 மாத காலம் இடைவெளி உள்ளது. சரி செய்ய மின்வாரியம் முன் வர வேண்டாமா?

இயக்குநர்கள் பதவியேற்பு இரண்டு கழகங்களின் செயல்பாடுகளையும் முன்னோக்கி கொண்டு செல்ல பயன்படும் என்ற வகையில் MD (TRANSCO), Director (Generation), Director (Projects), Director (Transmission Project) Director (Operation) ஆகியோர்களின் பணி சிறக்க வாழ்த்துகளை தெரிவிக்கிறோம்.

Chief Engineer (Personnel) பதவியை நிரப்ப வாரியத்தில் Chief Engineer பற்றாக்குறையா? அல்லது தகுதியான நபரை தேடிக் கொண்டிருக்கிறார்களா என்பது புலப்படாத ஒன்றாக இருந்து வருகிறது.

ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை என்பது துவக்க நிலையிலேயே உள்ளது. முழுமையான பேச்சுவார்த்தை மேற்கொள்ள வாரியம் முன் வரவேண்டும், மின்வாரியத்தில் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் என அனைவருக்கான I to IV பேச்சுவார்த்தை ஒப்பந்தம், உத்தரவு என்று தொடர்ந்து வரும் பாரம்பரியம்தான் நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துவோம்! நிலை நிறுத்துவோம்!

3.2.59 மேனாள் மாவட்ட நீதிபதி M.V. ஹரிகர ஐயர் அவர்களின் பரிந்துரை மற்றும் 1.12.69 ஊதிய உயர்வு ஒப்பந்தம் - பேச்சுவார்த்தை என்பது காலத்தால் உருவான பாரம்பரியம்! மறுக்கலாமோ!!

*- ஆசிரியர்*

# பணியாளர்களுக்கு போனஸ் பட்டுவாடா வாரிய உத்தரவு

**(ABSTRACT)**

TANGEDCO - Bonus and Ex-gratia to Workmen of TANGEDCO / TANTRANSCO for the year 2021-2022 - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 25**

**Dated 18th October 2022**
Subhakiruthu- Iyppasi-1,
Thiruvalluvar Aandu-2053.

**Read:**

1. (Per) FB TANGEDCO Proceedings No. 9 (SB), Dated : 02.03.2018.
2. G.O.Ms. No. 324, Finance (BPE) Department, Dated : 14.10.2022.

*****

**Proceedings:**

In the Government Order second read above, the Government have accorded sanction for payment of Bonus and Ex-gratia to the employees of the State Public Sector Undertakings.

2. In pursuance of the above Government Order, it is hereby ordered that the Workmen of the TANGEDCO/ TANTRANSCO covered by the Wage Settlement (Class III and IV), be paid a Bonus calculated at the rate of 8.33% of the salary (or) wage earned by them during the financial year 2021-2022, subject to and in accordance with the provisions of the Payment of Bonus Act, 1965 and as amended under the revised Bonus Act, 2015.

3. The workmen of the TANGEDCO/TANTRANSCO (monthly paid and full-time workmen), Helper (Trainees), Office Helper (Trainees), Assessors (Trainees), Mazdoor (Trainees) appointed with the time scale of pay and Gangman (Trainee) appointed on consolidated wages and also the workmen of the State Government, Central Government and other organisations, who had worked with Board on deputation during the financial year 2021-2022 drawing a salary (or) wage, including those drawing pay exceeding Rs. 21,000/- per month, will be eligible for the Bonus sanctioned in para-2 above.

4. The Part-time Sweepers and Sanitary workers who are getting the time scale of pay d uring the financial year 2021-2022, drawing the salary (or) wage, are also eligible for the Bonus sanctioned in para-2 above.

5. It is also ordered that the workmen of the Board covered by the Wage Settlement (Class III and IV) and the deputationists, entitled to get Bonus with reference to the orders in para 2, 3 and 4 above, shall also be paid an Ex-gratia at the rate of 1.67% of the salary (or) wage earned by them, during the financial year 2021-2022.

6. The contract labourers who have been absorbed as Mazdoor (Trainee), during the year 2021-2022 are eligible only for the Bonus and Ex-gratia in a proportionate manner for the period they had worked in the above post. Further, where the salary (or) wage of a workman entitled to Bonus exceeds Rs. 7,000/- (Rupees Seven

thousand only) per mensem, the Bonus payable to such workan shall be calculate as if his salary (or) wage is Rs. 7,000/- (Rupees Seven thousand only). The maximum Bonus amount payable shall be Rs. 6,997/- (Rupees Six thousand Nine hundred and ninety seven only).

7. Salary (or) wage for the purpose of payment of Bonus will include the following:-

(a) Bonus Pay-Leave Salary;
(b) Dearness Pay;
(c) All classes of special pay (including Short hand and Typewriting Special Pay);
(d) Personal Pay;
(e) Additional Pay for additional charge;
(f) Additional days wage paid for work on National Holidays and Festival Holidays;
(g) Dearness Allowannce;
(h) Personal Compensatory Allowance given for protecting loss of pay; and
(i) Deputation Allowance.

The term 'Salary' or 'Wage' will not include Interim Relief, over-time pay and allowances and any pay and allowance other than those mentioned from (a) to (i) above. Salary (or) Wage for the leave surrendered by an employee during 2021-2022 should not be taken into account for computation of Bonus.

8. All the workmen, who had worked in the establishment for not less than thirty working days in the financial year 2021-2022, are entitled to the payment of Bonus.

9. The Ex-gratia amount payable shall be Rs. 1,403/- (Rupees One thousand Four hundred and three only). This Ex-gratia will be reduced on actual basis if a workman had not worked on all the working days in the financial year 2021-2022 as per the provisions of Section 13 of the Payment of Bonus Act, 1965 and as amended in Revised Bonus Act, 2015.

10. The Bonus and Ex-gratia payable to Workman shall also be calculated, as if his/her salary (or) wage is Rs. 7,000/- (Rupees Seven thousand only) per mensem. Under this method, the Bonus and Ex-gratia amount payable shall be Rs. 6.997/- and Rs. 1,403/- respectively. The Bonus and Ex-gratia payable to a Workman shall not exceed Rs. 8,400/- (Rupees Eight thousand and Four hundred only) for the full year.

11. The TANGEDCO also directs that the workman, who is now udner suspension, but was on duty during the financial year 2021-2022, also be paid Bonus for the year 2021-2022 subject to the conditions mentioned above.

12. If, during any part of the financial year 2021-2022, a workman covered by the Wages Settlement was promoted to officer category, he/she shall also be paid the Bonus in a proportionate manner for the period he/she had worked in the workmen category.

13. The workman covered by the Wage Settlement, who had worked in the financial year 2021-2022 fully (or) partly, but had retired (or) died subsequently shall be paid the Bonus fully (or) proportionately, as the case may be to the legal heir of the deceased.

14. The expenditure on the payment of Bonus shall be debitable to the following head of account: "TANGEDCO Funds - Revenue Expenses - Account No. 75.501" and the expenditure on the payment of Ex-gratia shall be debitable to "Account No. 75.502".

15. The TANGEDCO also directs that the Bonus payment for the year 2021-2022 should be disbursed immediately by cashless mode of Electronic Clearance System (ECS) to all the eligible employees of TANGEDCO/ TANTRANSCO on 19.10.2022.

**(BY ORDER OF THE BOARD)**

**A. MANIKKANNAN**
**Secretary**

# கேங்மேன் ஊர் மாறுதல் குறித்த தெளிவுரை

நிர்வாகக் கிளை,
என்பி.கே.ஆர்.ஆர். மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை-600 002.

**கடித எண். 056578/ஜி.45/ஜி.452/2022, நாள்: 21.10.2022**

அனுப்புநர்:

திரு. **ஆ. மணிக்கண்டன்,** M.A., B.L.,, M.B.A.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு (மு.கூ.பொ.),

பெறுநர்:

**மேற்பார்வை பொறியாளர்,**
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம், பெரம்பலூர்.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - களப்பணி - 4-ம் நிலை பணித்தொகுதி - கேங்மேன் (பயிற்சி) பணியாளர்களின் விருப்ப மாறுதல் விண்ணப்பம் தொடர்பாக - தெளிவுரை வழங்குதல்.

பார்வை : தங்களின் கடித எண். 769/நிபி.2/உ.2/கோ. கேங்மேன்/2022. நாள்: 02.09.2022.

★★★

பார்வையில் காணும் கடிதம் வாயிலாக, தாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தெரிவிப்பது யாதெனில், கேங்மேன் (பயிற்சி) பணியாளர்கள் ஒதுக்கீடு என்பது அவ்வட்டத்திலுள்ள கோட்டங்கள் மற்றும் பிரிவுகளுக்கான தனித்தனி ஒதுக்கீடு என்றில்லாமல் மொத்த வட்டத்திற்கு உண்டான ஒதுக்கீடு ஆகும். ஒதுக்கீடு செய்யப்பட்ட வட்டத்தில், ஒவ்வொரு பிரிவிலும் உள்ள பணிகளைப் பொருத்து தங்களால் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2) மேலும், வாரிய ஆணை (Per.) (CMD) TANGEDCO Proceedings No. 72 நாள்: 23.11.2021-ன்படி, நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் பணியில் சேர்ந்து 1 வருட கால நிறைவின்போது வட்டத்திற்குள் பணியிட மாற்றம் மற்றும் 2 வருட கால நிறைவின்போது வேறு வட்டங்களுக்கு பணியிட மாற்றம் பெற தகுதி உள்ளவர் ஆவர்.

3) எனவே, வட்டத்திற்குள் விருப்ப மாறுதல் கோரிய கேங்மேன் (பயிற்சி) பணியாளர்கள், தற்போதைய பணியிடத்தில் பணியேற்பு செய்து ஒரு வருட காலம் பணி நிறைவு செய்து இருப்பின், வட்டத்திற்குள் பணியிட மாற்றம் வழங்க, மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கே முழு அதிகாரம் இருப்பதால், கேங்மேன் (பயிற்சி) பணியாளர்களுக்கு வட்டத்திற்குள் விருப்ப மாறுதல் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் போது, விருப்ப மாறுதல் கோரும் பிரிவு மற்றும் தற்போது பணிபுரியும் பிரிவு ஆகியவற்றில் கேங்மேன் (பயிற்சி) பணியாளர்கள் தேவை மற்றும் மாறுதல் வழங்குவதால் அவர்கள் தற்போது பணிபுரியும் பிரிவில் ஏற்படும் பணித்தோய்வு மற்றும் பணி பாதிப்பு ஆகியவைகளை கருத்தில் கொண்டு, வாரிய விதிகளின் படி மற்ற தகுதிகள் பொருந்தும் பட்சத்தில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்//27.10.2022)
**மு.ஜா. சாரம்மா,**
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/தொழிலாளர்
தலைமை பொறியாளர்/பணியமைப்புக்காக (மு.கூ.பொ).

## நான்மணிக்கடிகை பாடல். 07 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### கல்லிற் பிறக்குங் கதிர்மணி!

**கல்லிற் பிறக்குங் கதிர்மணி; காதலி**
**சொல்லிற் பிறக்கும் உயர்மதம் - மெல்லென்று**
**அருளிற் பிறக்கும் அறநெறி; எல்லாம்**
**பொருளிற் பிறந்து விடும்.**

**கருத்துரை**

கண்களைப் பறிக்கும் ஒளிமிகுந்த மணிகள் எல்லாம் கற்களில் (கல் வடிவில்) பிறக்கின்றன!

ஆடவனுக்கு எழுச்சி தரும் வீரம் அவனால் விரும்பப்படும் காதலியின் சொல்லில் பிறக்கிறது!

மனதில் ஊறும் மென்மையான அருளுணர்வில் பிறக்கின்றன அறம் பொருந்திய நல்வழிகள்!

ஆனால், அவ்வறத்தோடு இன்பம் முதலிய எல்லாப் நற்பேறுகளும் செல்வத்தினாற் கூடப் பிறக்கின்றன!

**அருஞ்சொற்பொருள்:**

கதிர்மணி = ஒளியுள்ள மணிகள்; கல்லிற் பிறக்கும் = மலையில் உண்டாகும்; உயர் மதம் = மிக்க களிப்பு; காதலி சொல்லிற் பிறக்கும் = காதலியினது இன்சொல்லினாற் தோன்றும்; அறநெறி = அறவழிகள்; மெல் என்ற அருளில் பிறக்கும் = மென்மை பொருந்திய அருளினிடம் உண்டாகும்; எல்லாம் = அவ்வறத்தோடு ஏனைய இன்பம் முதலிய எல்லாமும்; பொருளில் பிறந்துவிம் = செல்வத்தினால் உண்டாய்விடும்.

---

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
✆ : 9841446621 : 8939152361
tnebemployeesfederation3600@gmail.com

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

**விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தில் பணியின்போது மின்கம்பம் ஒடிந்து, அகால மரணமடைந்த, திருமணம் ஆகாத கேங்மேன் (பயிற்சி) க. காளிராஜ் அவர்களின் சகோதரருக்கு கருணை அடிப்படையில் களஉதவியாளர் (பயிற்சி) உத்திரவு பெற்றுத் தந்த எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநிலத் தலைமைக்கு நன்றி! நன்றி!**

கடந்த 04.12.2021 அன்று, விருதுநகர் மின்பகிர்மான வட்டம், சிவகாசி கோட்டம், செங்கமலநாச்சியார்புரம் பிரிவில், மின்கம்பத்தில் ஏறி தோழர். கு. காளிராஜ், கேங்மேன் (பயிற்சி) வேலை செய்து கொண்டு இருந்தார். தரமற்ற மின்கம்பம் ஒடிந்து விழுந்ததில், ஸ்தலத்திலேயே கேங்மேன் தோழர் க. காளிராஜ் மரணமடைந்தார்.

மற்றொரு கேங்மேன் தோழர் V. முருகேசன் அவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மரணமடைந்த தோழர் க. காளிராஜன் அவர்களுக்கு இழப்பீட்டுத்தொகை ரூ. 50/- இலட்சம் கேட்டும், கருணை அடிப்படையில் அவரது சகோதரர் கோதண்டராமனுக்கு வேலை வழங்கிடவும், பணியிடத்தில் விபத்து ஏற்பட காரணமானவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், விபத்தில் படுகாயமடைந்த தோழர் கேங்மேன் முருகேசனுக்கு மருத்துவ செலவுத் தொகையை வாரியமே மேற்கொள்ள வலியுறுத்தி மேற்பார்வை பொறியாளர் / விருதுநகர் அவர்களிடம் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி, காலதாமதம் ஆன நிலையில் 28.01.2022 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட TNEBEF விருதுநகர் கிளையின் சார்பில் கொடுக்கப்பட்டு, நோட்டீஸ் விருதுநகர் மாவட்டம் முழுவதும் நோட்டீஸ், பிளக்ஸ்போர்டு வைத்து போராட்ட தயாரிப்பு விரைவுபடுத்தப்பட்டது.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுச்செயலாளர் அவர்கள் இந்த விபரத்தை வாரியத் தலைவருக்கு கடிதம் மூலம் தெரிவித்து நேரடியாக அவரிடம் பேசியதை தொடர்ந்து,

மேற்பார்வை பொறியாளர், விருதுநகர் அவர்கள் 27.01.2022 அன்று இரவு 8 மணிக்குமேல் விருதுநகர் கிளை நிர்வாகிகளை அழைத்து, நேரடி பேச்சுவார்த்தைக்கு அழைத்து நேரடி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

முடிவாக,

1. இழப்பீட்டுத் தெகை ரூ. 12,33,387/- வழங்க அனுமதிக்கப்பட்டது.
2. பணியின்போது இறந்த தொழிலாளிக்கு குடும்ப நலநிதி ரூ. 3 லட்சம் நேரடியாக அவருடைய வீட்டுக்கு சென்று அவரது தந்தையிடம் மேற்பார்வை பொறியாளர் / விருதுநகர் அவர்களால் காசோலை வழங்கப்பட்டது.
3. அவரது சகோதரர் திரு. கோதண்டராமன் அவர்களுக்கு கள உதவியாளர் (பயிற்சி)-க்கு பரிந்துரைத்தார்கள்.
4. பணியிடத்தில் மேற்பார்வை செய்த முகவர் முதல்நிலை உட்பட சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
5. விபத்தில் காயமடைந்து மருத்துவ சிகிச்சை மேற்கொண்ட V. முருகேசன் கேங்மேன் அவர்களுக்கு மருத்துவச்செலவு தொகை ரூ. 3,34,444/- அனுமதிக்க பரிந்துரை செய்யப்பட்டது.

நமது பொதுச்செயலாளரின் தொடர் முயற்சியால், மறைந்த தோழர் க. காளிராஜ் கேங்மேன் அவர்களது சகோதரர். திரு. க. கோதண்டராமன் அவர்களுக்கு கள உதவியாளர் (பயிற்சி) ஆக பணி நியமன உத்திரவு 23.09.2022 அன்று மேற்பார்வை பொறியாளர் விருதுநகர் அவர்களால் வழங்கப்பட்டு, சிவகாசி கோட்டத்தில், திருத்தங்கள் பிரிவில், 01.10.2022 அன்று பணியேற்பு செய்துள்ளார் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கேங்மேன் தோழர்கள் தொடர்ந்து விபத்துக்குள்ளாகி வருவது குறித்து TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வாரியத்திற்கு 18.05.2022-ல் கொடுத்த வேலை நிறுத்த அறிவிப்பு கோரிக்கைகள் வரிசை எண். 6ல் உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற விபத்து வரை 25 கேங்மேன் தோழர்கள் மரணமடைந்த மற்றும் காயமடைந்தது குறித்து தெரிவித்து, இழப்பீட்டுத் தொகையும், வாரிசுக்கு வேலை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில் கடந்த 17.08.2022 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 24 கேங்மேன் தோழர்களில் 7 பேர் மரணமடைந்ததாகவும், 17 பேர் உயிரிழப்பு இல்லா விபத்து என்று தெரிவித்து உள்ளனர். இறந்த 4 கேங்மேன் தோழர்கள் குடும்பத்திற்கு வாங்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் தெரிவிக்கப்பட்டது.

எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநிலத் தலைமை எடுத்த தொடர் நடவடிக்கையின் காரணமாகவே, தற்போது இறந்த கேங்மேன் குடும்பத்தில் ஒருவருக்கு வாரிசு வேலை உத்திரவும், இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத் தலைமைக்கு திட்டக்கிளையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கேங்மேன் தோழர்கள் பிரச்சனைகள் மட்டுமல்ல, அனைத்துப் பகுதி பணியாளர்கள் / பொறியாளர், அலுவலர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள், பகுதி நேர பணியாளர்கள் என அனைவரின் நலன் காத்திட, உரிமைகளை பெற்றிட தொடர்ந்து போராடும் முதன்மை சங்கமான TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனை பலப்படுத்துவோம்! வெற்றி பெற்றிடுவோம்!

தோழமையுடன்,
**R. ராதாகிருஷ்ணன்,** B.E.,
திட்டச்செயலாளர்

---

**Tamilnadu Generation and Distribution Corporation Limited**

Office of the Superintending Engineer,
Virudhunagar Elecy. Distn, Circle,
Virudhunagar.

**Memo No. 914/ADO/Adm-II/A.1/F.Order/2022-2, Dt: 23.09.2022**

***Sub*** *:* Estt - Class IV Service - Thiru. K. Kothandaraman, B/o. (Late) K. Kaliraj, Gangman (Trainee)/Virudhunagar Electricity Distribution Circle Selected for appointment of Field Assistant (Trainee) on compassionate grounds appointment and posting orders - Issued.

***Ref*** *:* CE/Pers/Chennai, Memo No: 007324/G.9/G.91/2022, Dt. 02.09.2022

*****

Thiru. K. Kothandaraman, (D.O.B: 28.06.1997) B/o. (Late, K. Kaliraj, Gangman (Trainee) (Date of Death: 04.12.2021)/ Virudhunagar Electricity Distribution Circle, who has been selected for appontnent to the post of Field Assistant (Trainee) under compassionate grounds and allotted to the Superintending Engineer / Virudhunagar Electricity Distribution Circle / Virudhunagar, vide reference cited is appointed as Field Assistant (Trainee) and posted to Sivakasi Division.

He is instructed to report for duty to the Executive Engineer/ Distribution / Sivakasi within Fifteen days from the date of receipt of this order. If he fails to join duty within the stipulated time, the selection order will be cancelled.

**The appointment orders is subject to the following condition**

(i) He should produce satisfactory records in original regarding his educational qualification and date of birth to the Executive Engineer/ Distribution / Sivakasi before joining duty. If any discrepancy is found in the certificate or if he is found to be unqualified for the post now offered with reference to the certificate produced by him appointment will be cancelled.

(ii) He should produce a certificate of physical fitness in the prescribed form, which is herewith enclosed and he is instructed to obtain the same from Government MedicalOfficer not below the rank of Civil Surgeon.

(iii) He will be on training for a period of Three months in the time scale of pay Rs. 18800-59900.

(iv) On completion of 3 months training period satisfactorily, he will be regularly appointed in the post of Field Assistant.

(v) If the work is found to be unsatisfactory during the training Period, he will be terminated from the post of Field Assistant (Trainee).

(vi) He is instructed that he until completion of Two years, should not be eligible to make any application requesting tranfer to any other circle/office under the control of any other appointing authority and until completion of one year, should not be eligible to make such application within the circle / office under the control of the same appointing authority as per orders issued in (Per.) (CMD) TANGEDCO Proceedings No. 72 (Adm. Branch), dated 23.11.2021.

(iv) He is informed that she shall be declared as probationer only after receiving his Genuineness Certificates from the educational departments.

Encl: Medical Fitness

**Sd/-K. Thenmozhi**
Superintending Engineer
VREDC/Virudhunagar

**//Forwarded By Order///**

Adminsitrative Supervisor

# TANGEDCO, TANTRANSCO பணபட்டுவாடா - தொடர்பாக வாரியத் தலைவருக்கு தெரிவித்த கடிதம்

நாள் : 30.09.2022

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : மாதாந்திர ஊதியம் மற்றும் முன் பணம் - படிகள் - TANGEDCO - TANTRANSCO - பட்டுவாடா - தொடர்பாக.**

TANGEDCO மற்றும் TANTRANSCOவில் பணியாற்றி வருபவர்களுக்கு மாதாந்திர ஊதியம் மற்றும் பொது வைப்பு நிதி கடன், இரவுப்படி, இரட்டிப்பு ஊதியம் போன்ற இதர வகைகளில் பணப்பட்டுவாடா ஒரே நேரத்தில் இல்லாததை சரி செய்திட வேண்டுகிறோம்.

குறிப்பாக மாதாந்திர ஊதியம் வங்கிக் கணக்கில் TANGEDCOவிற்கு காலையில் வரவாகிறது. TANTRANSCOவிற்கு மாலையில் வரவாகிறது.

பொதுவைப்பு நிதி முன்பணம் போன்ற இதர வகைகள் பெறுவதில் TANGEDCOவிற்கும் TANTRANSCOவிற்கும் குறைந்தது மூன்று மாத காலம் இடைவெளி இருக்கிறது, உதாரணத்திற்கு TANGEDCO ஆகஸ்ட் வரை வழங்கியிருக்கிறது என்றால் TANTRANSCOவில் மே மாத அளவில்தான் வழங்கியுள்ளது என்ற நிலை இருந்து வருகிறது.

மேற்கண்ட நிலையை சீர்செய்து பணியாற்றுபவர்கள் பாதிக்கப்படாத வகையில் TANGEDCO, TANTRANSCO இரண்டிலும் ஒரே மாதிரியான கால அளவினில் பணப்பட்டுவாடா செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# ஓய்வூதியருக்கு அகவிலைப்படி உயர்வு அளிக்கக் கேட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு கடிதம்

நாள் : 02.11.2022

பெறுநர்:

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள்,
தமிழ்நாடு அரசு, தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

ஐயா,

***பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம் - ஓய்வூதியர்கள் - அகவிலைப்படி உயர்வு - நிறுத்தி வைத்துள்ளதை உடனடியாக வழங்கிட கோருதல் - தொடர்பாக.***

***பார்வை : அரசாணை எண். 254, நாள் : 18.8.2022.***

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கட்கு வணக்கம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு 1.07.2022 முதல் அறிவித்திருந்த 3% அகவிலைப்படி உயர்வு தமிழக அரசுப் பணியாளர்களுக்கு 18.8.2022 முதல் வழங்கப்பட்ட பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு கடந்த 23.09.2022 தேதியில் அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டது.

தமிழக அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் போதெல்லாம் மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கும் வழங்கி வரும் நடைமுறை காலங்காலமாக உள்ளதில் தற்சமயம் தமிழக அரசின் நிதித்துறையின் ஒப்புதல் பெற வேண்டும் என்ற பெயரில் பணியாற்றுபவர்களுக்கு காலம் தாழ்த்தி வழங்கப்பட்டுள்ளது.

பணியாற்றுபவர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அளிக்கும் அதே தேதியில் ஓய்வூதியருக்கும் அளித்திடும் நடைமுறை தொடர்ந்து வந்துள்ள நிலையில் 1.7.2022 முதல் வழங்கிட வேண்டிய 3% அகவிலைப்படியை ஓய்வூதியர்களுக்கு வழங்காமல் இருப்பதால் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் குடும்பங்கள் மத்தியில் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள், கருணைத் தொகை பெறுபவர்கள் என 90,000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்த அகவிலைப்படி உயர்வுக்கு எதிர்பார்த்து காத்திருக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

1957ல் உருவாக்கப்பட்ட தமிழக மின்சார வாரியத்தை கருத்தாலும், கரத்தாலும் உழைத்து உயர்த்தி தேசிய அளவில் தமிழக மின்சார வாரியத்திற்கு நற்பெயரையும், நல்வருவாயையும் ஈட்டித் தந்த 90,000க்கு மேற்பட்டோர் தமிழகத்தின் மூத்த குடிமக்கள் வரிசையில் உள்ளார்கள் என்பதையும், இவர்களுக்கான அகவிலைப்படி உயர்வு அளிப்பதில் காரணமின்றி தவிர்த்து வருவதையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதுடன் தொழிலாளர்களின் நலன் காக்கும் நல்லரசாக திகழும் தங்களின் ஆட்சிக் காலத்தில் ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயர்வை வழங்காமல் இருத்தல் அரசின் நற்பெயருக்கு நலமாக அமையாது என்பதால் நிதித்துறை அமைச்சகத்திற்கும், அலுவலகத்திற்கும் தகுந்த உத்திரவிட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள 90,000க்கு மேற்பட்ட ஓய்வூதியர்களுக்கு உடனடியாக 3% அகவிலைப்படி உயர்வை அளித்திட ஆவன செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி !

தங்களின் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயர்வுக்கான ஆணை

**(ABSTRACT)**

PENSION - Dearness Allowance to Pensioners and Family Pensioners - Revised rate of Dearness Allowance from 1st July, 2022 - Adoption of Government Orders - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 28**

**Dated the 4th November, 2022**
Subhakiruthu Varudam, Aippasi-18,
Thiruvalluvar Aandu-2053.

**Read:**

1. (Per) CMD TANGEDCO Proceedings No. 9 (SB), Dated : 19.01.2022.
2. G.O.Ms. No. 257, Finance (Pension) Department, Dated : 18.08.2022.

*****

**Proceedings:**

In the Proceedings first read above, among other things, orders were issued allowing 31% of Dearness Allowance to the Pensioners/Family Pensioners of Tamil Nadu Generation and Distribution Corporation Limited with effect from 01.01.2022.

2. In the Government Order second read above, orders have been issued revising the rate of Dearness Allowance from 31% to 34%, payable to the Pensioners/Family Pensioners of the Government with effect from 1st July, 2022. It has been decided to extend the same benefit to the Pensioners/Family Pensioners of TANGEDCO.

3. Accordingly, it is hereby ordered that the Pensioners/Family Pensioners of TANGEDCO, be paid Dearness Allowance with effect from 1st July 2022 at the following rates:-

| **Date from which payable** | **Revised rate of Dearness Allowance** (per month) |
|---|---|
| **1st July, 2022** | **34%** of Basic Pension/Family Pension |

4. The increased rate of Dearness Allowance from 31% to 34%, ordered in para-2 above, shall be paid to the Pensioners/Family Pensioners along with the pension/family pension from the month of November 2022.

5. Consequent on increase in the rate of Dearness Allowance from 31% to 34%, the arrears for the period from 01.07.2022 to 31.10.2022 (i.e. from July to October) as ordered in para-2 above, shall be paid to the Pensioners/Family Pensioners on 05.11.2022.

6. The amount of Dearness allowance involving a fraction of a rupee shall be rounded off to the next higher rupee, if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

7. In the case of divisible Family Pension, the Dearness Allowance shall also be paid proportionately.

**(BY ORDER OF THE BOARD)**

**RAJESH LAKHONI**
**Chairman-Cum-Managing Director**

# விருப்ப ஓய்வு - வெயிட்டேஜ் உத்தரவு

**(ABSTRACT)**

TANGEDCO - Regulations - Revision of Service weightage for employees who proceed on Voluntary Retirement - Amendments to regulations 17(gg) of Tamil Nadu Electricity Board Service Regulations - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 24** | **Dated the 14th October 2022**
Purattasi-27, Subhakiruthu Varudam,
Thiruvalluvar Aandu-2053.

**Read:**

1. G.O. (Ms) No. 51, P&AR (S) Department, dated 07.05.2020
2. (Per) FB TANGEDCO Proceedings No. 13 (SB), dated 28.05.2020.
3. (Per) FB TANGEDCO Proceedings No. 14 (SB), dated 28.05.2020.
4. G.O. (Ms) No. 62, P&AR (FR-II) Department, dated 01.06.2020.
5. G.O. (Ms) No. 29, P&AR (S) Department, dated 25.02.2021.
6. (Per) FB TANGEDCO Proceedings No. 8 (SB), dated 03.05.2021.
7. G.O. (Ms) No. 92, HRM (FR.II) Department, dated 13.09.2021.
8. (Per) FB TANGEDCO Proceedings No. 14 (SB), dated 21.06.2022.
9. G.O. (Ms) No. 53, HRM (FR.II) Department, dated 08.06.2022.

*****

**Proceedings:**

The Government in its G.O. first read above, had issued orders increasing the age of superannuation of Government servants from 58 years to 59 years. The said G.O. had been adopted in TANGEDCO and orders were issued increasing the age of superannuation of the officials in Officers categories (Class-I & II services) and Workmen categories (Class-III & IV services) from 58 to 59 years - vide Proceedings second and third read above, Subsequently, the Government in its G.O., fifth read above, had issued orders increasing the age of superannuation of Government servants from 59 years to 60 years. The said G.O. had also been adopted in TANGEDCO and orders were issued increasing the age of superannuation of the officers/employees of TANGEDCO on superannuation from 59 years to 60 years - vide Proceedings sixth read above. The Government in orders fourth and seventh read above, had issued amendments to rule 56(1) (a) of Fundamental Rules enahancing the age of employees from 58 to 59 and from 59 to 60 respectively. By adopting the said G.Os., orders have been issued, amending regulation 17 of Tamil Nadu Electricity Board Service Regulations, enhancing the age of superannuation of employees from 58 years to 60 years - vide Proceedings eighth read above.

2. As per rule 56 of the Fundamental Rules, the Government servants who proceed on Voluntary Retirement before attaining the age of 58 years, shall be allowed additional service weightage of upto 5 years with reference to their age and with reference to thei qualifying service, so as to allow additional pension and pensionary benefits to them. The same benefit is being extended to the employees of TANGEDCO also, as per regulation 17(gg) of TNEB Service Regulations. Consequent on increase in the age of superannuation of Government servants initially from 58 years to 59 years and thereafter from 59 years to 60 years, the additional service weightage could not be allowed to those who retired voluntarily from service after attaining the age of (i) 58 years but before 59

years; and (ii) 59 years but before 60 years, as the case may be. Now, the Government in its G.O. ninth read above, have issued amendments to rule 56 of Tamil Nadu Government Fundamental Rules, revising the service weightage with reference to the age for Government servants.

3. The Tamil Nadu Electricity Board Service Regulations have been framed based on the Tamil Nadu State and Subordinate Services Rules (repealed as Tamil Nadu Government Servants (Conditions of Services) Act 2016) and the Fundamental Rules of Government of Tamil Nadu. The regulation 17 of TNEB Service Regulations is corresponding to rule 56 of the Fundamental Rules. Hence, a proposal for making amendments to the said regulation based on the orders issued by the Government in its G.O. ninth read above, has been considered and approved by the Board of TANGEDCO.

4. Accordingly, in exercisee of the powers conferred by Section 79(c) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948), read with Section 185 of the Electricity (Supply) Act, 2003 and G.O.Ms. No. 100, Energy (B2) Department, dated 19.10.2010, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited (formerly Tamil Nadu Electricity Board) makes the following amendments to the Tamil Nadu Electricity Board Service Regulations:-

## AMENDMENTS

(i) In the said Regulations, in regulation 17, in sub-regulation (gg), in clause (d), in sub-clause (i), in the Table, under the heading "Weightage with reference to age" in column (2) and all sub-headings and expressions thereunder, the following heading and the expressions shall be substituted, namely:-

| Weightage with reference to age | |
|---|---|
| (2) | |
| Age<br>(a) | Weightage<br>(b) |
| For all the employees other than Office Helper, Duffadars and certain categories of Regular Work Establishment workmen for whom the age of retirement is 60 years. | |
| 54 years and below | 5 years of weightage |
| 55 years | 4 years of weightage |
| 56 years | 3 years of weightage |
| 57 years | 2 years of weightage |
| 58 years | 1 year of weightage |

(ii) In the said Regulations, in regulation 17, in sub-regulation (gg), in clause (d), in sub-clause (i), in the Table, under the heading "Weightage with reference to age" in column (2) and all sub-headings and expressions thereunder, the following heading and the expressions shall be substituted, namely:

| Weightage with reference to age | |
|---|---|
| (2) | |
| Age<br>(a) | Weightage<br>(b) |
| for all the employees | |
| 55 years and below | 5 years of weightage |
| 56 years | 4 years of weightage |
| 57 years | 3 years of weightage |
| 58 years | 2 years of weightage |
| 59 years | 1 year of weightage |

The Amendment (i) above shall be deemed to have come into force on the 7th May, 2020;

The Amendment (ii) above shall be deemed to have come into force on the 25th February, 2021.

**(BY ORDER OF THE BOARD)**

**A. MANIKKANNAN**
Secretary

# பேறுகால விடுப்பு-270 நாட்களிலிருந்து 365 நாட்களாக நீட்டித்த வாரிய உத்தரவு

**(ABSTRACT)**

Tamil Nadu Electricity Board Leave Regulations - Enhancement of Maternity Leave from 9 months (270 days) to 12 months (365 days) - Amendments to regulation 24 of Tamil Nadu Electricity Board Leave Regulations - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 21** **Dated the 14th October, 2022**

Subhakiruthu Varudam, Purattasi-27,
Thiruvalluvar Aandu-2053.

**Read:**

1. G.O. (Ms.) No. 84, Human Resources Management (FR.III) Department, dated 23.08.2021.
2. (Per) CMD TANGEDCO Proceedings No. 183 (SB), dated 13.09.2021.
3. G.O. (Ms.) No. 45, Human Resources Management (FR-II) Department, dated 13.05.2022.

*****

**Proceedings:**

The Government in its order first read above, had issued orders enhancing the period of Maternity Leave admissible to married women Government Servants from 9 months (270 days) to 12 months (365 days) which may be spread over from the pre-confinement topost-confinement recuperation at the option of the woman Government Servant with effect from 01.07.2021. The said Government Order has been adopted in TANGEDCO and orders have been issued in the Proceedings second read above. Consequent to issuance of the orders first read above, necessary amendments to rule 101 of the Fundamental Rules have been issued by the Government - vide Government Order third read above.

2. The Tamil Nadu Electricity Board Leave Regulations have been framed based on the Fundamental Rules of Government of Tamil Nadu. The regulation 24 of Tamil Nadu Electricity Board Leave Regulations is corresponding to rule 101 of Fundamental Rules. Hence, a proposal for making amendments for the said regulatiopns based on the orders issued by the Government in Government Order third read above has been considered and approved by the Board of TANGEDCO.

3. Accordingly, in exercise of the powers conferred by Section 79(c) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948), read with Section 185 of the Electricity (Supply) Act, 2003 and G.O.Ms.No. 100, Energy (B2) Department, (formerly Tamil Nadu Electricity Board) makes the following amendments to the Tamil Nadu Electricity Board Leave Regulations:-

**AMENDMENTS**

In the said Regulations, in regulation 24,-

I. In sub-regulation (1) for the expression "270 days", wherever, it occurs, the expression "365 days" shall be substituted;

ii. for Note (3) under sub-regulation (1), the following Note shall be substituted namely;

Note (3): The women employees who proceeded on Maternity Leave prior to 1st July 2021 and continued to be on that leave on or after that date shall also be eligible for maternity leave for a period not exceeding 365 days in total".

4. The above amendments shall be deemed to have come into force on the 1st July, 2021.

**(BY ORDER OF THE BOARD)**

**A. MANIKKANNAN, Secretary**

## காஞ்சிபுரம் மண்டலம்

Administrative Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai - 600 002.

**(ABSTRACT)**

Establishment - Changes of the name of Thiruvallur Region as Kanchipuram Region and to fix the Head Quarters at Kanchipuram - Amendment Issued.

---

**(ADMINISTRATIVE BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No. 79** **Dated 02.11.2022**

Subhakiruthu Varudam, Aippasi-16,
Thiruvalluvar Aandu-2053.

**Read:**

1. (Per.) FB TANGEDCO Proceedings No. 1, (Adm. Branch) dated 25.01.2022.

*****

**Proceedings:**

In the above said proceedings among others that the following orders have been issued:-

"iv. Shifting of Head Quarters of Chennai South Region to Thiruvallur and rename it as Thiruvallur Region with Kancheepuram and Chengalpattu Electricity Distribution Circle and Shifting of Head Quarters of one Chennai EDC to Thiruvallur and rename it as Thiruvallur EDC by duly rationalizing the existing infrastructure in Chennai Regions".

2) The Hon'ble Chief Minister of Tamilnadu while attending the function on 16.04.2022 for celebrating the 1 lakh free agriculture services given to the farmers during the year 2021-22, he has announced that the "Chennai South Region to be shifted to Kanchipuram and renamed as Kanchipuram Region and the Head Quarters of the above said Region is fixed at Kanchipuram."

3) Based on the above said announcement of the Hon'ble Chief Minister of Tamil Nadu, it has been decided to issue suitable amendment to the proceedings read above. Accordingly, the following amendment be issued to the **BP (Per.) FB TANGEDCo Proceedings No. 1, (Adm. Branch) dated 25.01.2022.**

**AMENDMENT**

The entties made in para 1(iv) in the (per.) FB TANGEDCO Proceedings No. 1, (Adm. Branch) dated 25.01.2022; the following entries shall be substituted:

"Para (iv): Chennai South Region be shifted to Kanchipuram and renamed as Kanchipuram Distribution Region and the Head Quarters of the above said Region be fixed at Kanchipuram".

**RAJESH LAKHONI**
**CHAIRMAN CUM MANAGING DIRECTOR**




**பிரிவு - 216 (Section - 216)**

**குற்றம்:** கொள்ளைக்காரர்கள் அல்லது கூட்டுக் கொள்ளையர்களுக்குப் புகலளித்தல்.

**தண்டனை:** 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறையும் அபராதமும்.

**பிரிவு - 217 (Section - 217)**

**குற்றம்:** தண்டனையிலிருந்து நபரையோ, தண்ட இழப்பிலிருந்து சொத்தினையோ காத்துக் கொள்ள வேண்டிச் சட்டத்தின் உத்தரவுக்குப் பொது ஊழியர் கீழ்ப்படியாதிருத்தல்.

**தண்டனை:** 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு - 218 (Section - 218)**

**குற்றம்:** தண்டனையிலிருந்து நபரையோ, தண்ட இழப்பிலிருந்து சொத்தினையோ காத்துக் கொள்ள வேண்டிப் பொது ஊழியர் தவறான எழுத்துக் குறிப்பு அல்லது பதிவினை ஏற்படுத்தி வைத்தல்.

**தண்டனை:** 3 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு - 219 (Section - 219)**

**குற்றம்:** சட்டத்திற்கு முரணானது என்று தெரிந்தும், கட்டளை, அறிக்கை தீர்மானம் அல்லது தீர்ப்பு ஒன்றினைப் பொது ஊழியர் நெறிகேடான முறையில் ஒரு நீதிமன்ற நடவடிக்கையில் எழுதிப் பகர்தல்.

**தண்டனை:** 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு - 220 (Section - 220)**

**குற்றம்:** அதிகாரம் பெற்றுள்ள ஒருவர், தாம் சட்டத்திற்கு முரணாக நடப்பதை அறிந்தே, ஒருவரை மேல் விசாரணைக்கு அனுப்புதல் அல்லது சிறையில் அடைத்து வைத்தல்.

**தண்டனை:** 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு - 221 (Section - 221)**

**குற்றம்:** ஒரு குற்றவாளியைக் கைது செய்வதற்குச் சட்டப்படிக் கடமைப்பட்டுள்ள ஒரு பொது ஊழியர், வேண்டுமென்றே கைது செய்யாமல் விட்டுவிடுதல்.

**தண்டனை:** கைது செய்யப்பட வேண்டிய நபரின் குற்றமானது, மரண தண்டனைக்குரிய குற்றமெனில் - அபராதத்துடனோ இல்லாமலோ 7 ஆண்டுகள் சிறை தண்டனை. ஆயுள் அல்லது பத்து ஆண்டுகள் சிறை தண்டனைக்குரிய குற்றமெனில் - 3 ஆண்டுகள் சிறை, அபராதத்துடனோ அபராதம் இன்றியோ. பிற வகைகளுக்கு - 2 ஆண்டுகள் சிறை அபராதத்துடனோ அபராதம் இன்றியோ.

**பிரிவு - 222 (Section - 222)**

**குற்றம்:** நீதிமன்றத் தண்டனைக்கு உள்ளானவரைக் கைது செய்வதற்குச் சட்டப்படிக் கடமைப்பட்டுள்ள ஒரு பொது ஊழியர், வேண்டுமென்றே கைது செய்யாமல் விட்டுவிடுதல்.

**தண்டனை:** கைது செய்யப்பட வேண்டிய நபரின் குற்றமானது, மரண தண்டனைக்குரிய குற்றமெனில் - ஆயுள் சிறை அல்லது அபராதத்துடனோ இல்லாமலோ 14 ஆண்டுகள் சிறை தண்டனை. ஆயுள் அல்லது பத்து ஆண்டுகள் சிறை தண்டனைக்குரிய குற்றமெனில் - 7 ஆண்டுகள் சிறை, அபராதத்துடனோ அபராதம் இன்றியோ. பிற வகைகளுக்கு - 3 ஆண்டுகள் சிறை, அபராதத்துடனோ அபராதம் இன்றியோ.

**பிரிவு - 223 (Section - 223)**

**குற்றம்:** ஒரு பொது ஊழியர், தம் கவனமின்றி, காவலிலிருந்து குற்றவாளியைத் தப்பியோட விடுதல்.

**தண்டனை:** 2 ஆண்டுகள் சிறை, அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு - 224 (Section - 224)**

**குற்றம்:** தம்மைச் சட்டப்பூர்வமாகக் கைது செய்வதை ஒருவர் எதிர்த்தல் அல்லது தடுத்தல்.

**தண்டனை:** 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு - 225 (Section - 225)**

